Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 6** |
| Name | :: | **முத்துஆறுமுகம்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் இறப்பு. 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**27.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்ததில் குடியிருந்து கோழி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 1 வருடத்திற்கு முன்பு சரியாக நினைவில் இல்லை ஆனால் ஒரு நாள் மாலை 07.00 மணியளவில் நானும், முத்துஅமர்நாத்தும் செல்வக்குமார் வீட்டின் அருகே இருந்தபோது சண்டை நடந்த இடத்தை அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் இருந்து வந்த போலீசார் வந்து டார்ச் அடித்து பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தயார் செய்த ஆவணத்தில் சாட்சியாக நானும், முத்துஅமர்நாத்வும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். **(பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 அழகேஸ்வரி எனக்கு சொந்தம் என்றால் சரிதான். படம்

வரைந்த தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் வந்தவுடன் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை, படம் வரைந்த பிறகு தான் கையெழுத்து வாங்கினார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அழகேஸ்வரி எனது உறவினர் என்பதால் அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **குருசாமி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the
day of 2026

---

**1, 2 எதிரிகள் இறப்பு. 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**27.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்ததில் குடியிருந்து வருகிறேன். ஆட்டு பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். அசா.1 அழகேஸ்வரி எனது தம்பி மனைவி ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். இவ்வழக்கின் எதிரியான செல்வக்குமார் எனது தம்பியின் மனைவியான அழகேஸ்வரியிடம் அவ்வப்போது குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்வார். கடந்த 24.02.2021ம் தேதி மாலையில் அதே போல் குடித்துவிட்டு எனது தம்பி மனைவியிடம் பிரச்சனை செய்துள்ளார். அன்று தகாத வார்த்தையில் எனதுதம்பியின் மனைவியை போடி வாடி தேவிடியா என்று அசிங்கமாக திட்டி உள்ளார். அங்கிருந்த நபர்கள் எனக்கு தகவல் கொடுத்து அன்று மாலை 06.30 மணியளவில் எனது தம்பியின் வீட்டிற்கு சென்று எனது தம்பியின் மனைவியையும் செல்வகுமாரையும் இதுபோல் பிரச்சனை ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தினேன். பின்னர் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன்.

2. பின்னர் அன்று இரவே அருப்புக்கோட்டை தாலுகா காவல்

நிலையத்திற்கு சென்று செல்வகுமாரை கண்டித்து வைக்கும்படி போலீசாரிடம் தகவல் தெரிவித்தேன். அவர்கள் மறுநாள் வரசொன்னார்கள். அதனால் மறுநாள் 25.02.2021ம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் நான் காவல் நிலையத்திற்கு சென்று நான் அங்கே காத்திருந்தபோது எனது தம்பி முத்துக்குமார் எனக்கு போன் செய்து நாகராஜ், சமயன், செல்வக்குமார், கோழிகூடு ஆகியோர்கள் அவரை அடித்துவிட்டதாகவும் மற்றும் செல்வக்குமார், சமயன், முத்துமணி ஆகியோர்கள் எனது அப்பாவான லெட்சுமணனை கான்கிரீட் போட பயன்படுத்தும் கட்டையை வைத்து அதில் இருந்த ஆணியுடன் சேர்த்து எனதுஅப்பாவின் உச்சந்தலையில் அடித்ததாக எனது தம்பி என்னிடம் கூறினார். மேலும் அவர்கள் எனது அப்பாவின் இடது கை கட்டைவிரலை உடைத்து விட்டதாகவும் கூறினார்கள். மேலும் எனது மனைவி முத்துவை நெஞ்சில் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும் கூறினார்கள். எனது மனைவியை சமயன் தான் கீழே தள்ளியதாகவும் எனது மனைவி கீழே விழுந்தபோது கல்லில் பட்டு அவருக்கு குறுக்கிலும், முதுகிலும் அடிபட்டதாக கூறினார்கள்.

3. எனது தம்பி முத்துக்குமாரை நாகராஜ் மற்றும் கோழிகூடு கைகளை பிடித்து கொண்டதாகவும், முத்துமாணிக்கம், சமயன், செல்வக்குமார் ஆகியோர்கள் எனது தம்பியை சுவற்றில் முட்ட வைத்து அடித்ததாக கூறினார். செல்வக்குமார் மற்றும் சமயன் எனது தம்பி மனைவியான அழகேஸ்வரியை நெஞ்சிலும், பின்னால் குறுக்கிலும் அடித்து தள்ளிவிட்டதாக கூறினார். மேற்படி சம்பவம் நடந்தபோது நான் காவல் நிலையத்தில் இருந்தேன். எனது தம்பி எனக்கு போன் செய்து தான் மேற்படி விவரத்தை கூறினார். அப்போது அடிபட்ட நபர்களை குட்டி யானை மூலமாக ஏற்றிகொண்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினார்.

4. நான் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிவித்துவிட்டு உடனே கிளம்பி அன்று காலை 11.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று அவர்களை பார்த்தேன். எனது மனைவியை பார்த்தபோது எனது மனைவிக்கு மார்பு, முதுகு மற்றும் குறுக்கில் காயம் இருந்தது. எனது தம்பிக்கு ஊமை காயங்கள் இருந்தது. எனது தம்பியின்

மனைவிக்கு பின்னால் குறுக்கு பகுதியிலும், மார்பிலும் காயம் இருந்தது. எனது அப்பாவிற்கு தலை மற்றும் இடது கை கட்டை விரலில் காயம் இருந்தது. 3 நாட்கள் அவர்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். அதன்பின்னர் தனியார் மருத்துவமனை மூலமாக 3 இலட்சம் செலவு செய்து எனது தந்தைக்கு மருத்துவம் பார்த்தேன். நானும், எனது தம்பி முத்துக்குமாரும், அவரது மனைவியும் 26.02.2021ம் தேதி மாலை 06.00 மணியளவில் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது அசா.1 புகார் கொடுத்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ.1 புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் எனது ஊரில் வைத்து விசாரணை செய்தார்கள். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அசா.1 அழகேஸ்வரி வீட்டில் இருந்து எனது வீடு எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளது என்றால் 100 மீ தொலைவில் உள்ளது. நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் என்னை ஒருபோதும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கின் புகார்தாரர் எனது உறவினர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்றால் அழகேஸ்வரி எழுதினார். போலீசார் சொல்ல சொல்ல தான் அழகேஸ்வரி எழுதினார் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**